முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS. 53/2020** **PW:1** **09.06.2025**

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் **09** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய தங்கராசு என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.B.ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராசு | வயது | 67 |
| த/க. பெயர் | துரைசாமி | தொழில் | கூலி |
| ஜாதி | | கிராமம் | ஆக்கனூர் |
| வட்டம் | திட்டக்குடி | மாவட்டம் | கடலூர் |

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என் சகோதரர். தாவா சொத்து எனக்கு பாக அட்டவணை மூலம் கிடைத்தது. பாக அட்டவணையில் பாதையின் அளவு குறிப்பிடவில்லை. தாவா சொத்து புல எண்.36/2 ஆகும். தற்காலம் மேற்படி புல எண்.36/2 சப்டிவிஷன் ஏ மற்றும் பி என மாறியுள்ளது என்றால் சரிதான். புல எண்.36/2 ஏ என்பது எனக்கு புல எண்.36/2 பி என்பது எனது சகோதரரான பிரதிவாதிக்கும் சம்மந்தப்பட்டது. தாவா சொத்திற்கு கீழ்புறம் புல எண்.36/2 பில் தற்போது தார்ரோடு போடப்பட்டுள்ளது. தார்ரோடானது தெற்கில் இருந்து வடக்கே சென்று புல எண்.36/1 வரை செல்கிறது. புல எண்.36/1 லிருந்து மேல் புறமாக வந்து வடபுறமாக சென்று வாய்கால் கரையாக செல்கிறது என்றால் சரிதான். தார்ரோடானது புல எண்.36/2 ஏல் மேல்புறம் முழுவதுமாக உள்ளது என்றால் சரிதான்.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(S/d.B.Harini Priya)**
**Principal District Munsif,**
Tittagudi.